<u>மாசுக் கட்டுப்பாட்டு வாரிய வினாப்பட்டியல்</u>

1) 74வது அரசியலமைப்பு திருத்த சட்டத்திற்கு பின்பு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தை சார்ந்த பணிகளை வரன்முறைப்படுத்துவது (வரிசை எண் 8 அரசியலமைப்பு சட்டத்தின் 12வது அட்டவணை) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியமும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் எம்முறையில் ஒருங்கிணைந்து செயல்படலாம் எனக் கருதப்படுகிறது?

2) தற்பொழுது 1999ஆம் ஆண்டு திடக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் மேலாண்மை செய்தல் விதிமுறைகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் இரண்டும் கட்டுப்பாடு செய்வது போன்று உள்ளது. மேற்சொன்ன இரட்டை முறை கட்டுபாடுகள் தவிர்க்கப்பட்டு, எந்த மாதிரியான நடைமுறைப்படுத்தக் கூடிய ஒரு பொருளில் இரண்டு அமைப்புகளும் அதிகாரம் செலுத்துவது போல் அல்லது தனித்து செயல்படும் வகையில் நடைமுறையை கொண்டு வரலாம் எனக் கருதுகிறீர்கள்?

3) 1977 ஆம் ஆண்டு குடிநீர் வரிச்சட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து குடிநீர் தீர்வையை வசூலிக்கின்றது. இம்மாதிரி தீர்வை காலப்பிழை (Anachronism) போல் அல்லவா உள்ளது?

4) கடந்த 20 ஆண்டுகளாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பல்வேறு பொருட்களில் தொழில் நுட்பத்தை தேர்ச்சி பெறும் வகையில் வளர்ச்சி பெற்றுள்ளது. மேற்சொன்ன வகையில் பெற்ற அனுபவங்களையும் திறமையும் கொண்டு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளதா? அப்படி, கொடுக்கப்பட்டிருப்பின் நடத்தப்பட்ட பயிற்சி விவரங்களை குறிக்கவும்.

5) இரண்டாவது மாநில நிதி ஆணையம், மாவட்ட அளவில் சுற்றுப்புற தூய்மை மற்றும் மாசுக் கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, மாவட்ட அளவில் பணியாற்றும் பல்வேறு துறை வல்லுநர்களையும் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் பணியாளர்களை கொண்டு மாவட்ட அளவிலான குழு அமைக்க வேண்டும் என பரிந்துரை செய்திருந்தது. அதே போன்று சென்னை மாநகராட்சி பகுதியில், மேயரை தலைவராக கொண்டு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையரை உறுப்பினராக கொண்டு குழு அமைக்கலாம்

எனவும் பரிந்துரை செய்திருந்தது. துறை செயலாளர்கள் அளவிலான கூட்டத்தில் இப்பரிந்துரை எற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் இதுவரை இது சம்பந்தமான எவ்வித ஆணையும் வெளியிடப்படவில்லை. தங்கள் வாரியத்திலிருந்து இப்பரிந்துரையை செயல்படுத்துவதற்காக தொடர் நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதா?

6) இரண்டாவது மாநில நிதி ஆணையம், பின்வரும் பொறுப்புகளை திறம்பட ஆற்றுகின்ற முறையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் ஒத்துழைப்புடன் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் செயல்பாடுகள் சீரமைக்கப்பட வேண்டியது அவசியம் என பரிந்துரை செய்திருந்தது.

அ) மண்டல கழிவு நிர்வாகம் குறித்துத் திட்டமிடல்

ஆ) துப்புரவான முறையில் நிலத்தில் இட்டு நிரப்பும் மனைகளை முறைப்படுத்துவதில் திறன்களை மேம்படுத்தல்.

இ) நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களின் ஒரு தொகுதிக்காக, ஒரே மைய இடத்தில் இட்டு நிரப்பும் மனைகளில் போடுவதன் மூலம் நகராட்சி திடக் கழிவை, அறிவியல் முறையில் அகற்றுதல்.

ஈ) சுகாதாரமான நகர்ப்பகுதி சுற்றுச் சூழலை ஏற்படுத்துவதற்காக சட்டத்தின் விதிமுறைகளைச் செயற்படுத்துதல்.

உ) தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவதற்கான உரிமம் வழங்குவதற்கு முன்னர், உச்சநீதிமன்றம் குறிப்பிட்டவாறு, அந்தத் தொழிற்சாலையினால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு குறித்த மதிப்பீட்டைப் பெற்று "மாசு ஏற்படுத்துபவர் அதற்குத் தொகை செலுத்த வேண்டும்" என்ற கொள்கையைப் பொருந்துமாறு செய்ய வேண்டும்.

மேற்சொன்ன பரிந்துரை துறை செயலாளர்கள் அளவிலான கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் இதுசம்பந்தமாக எவ்வித ஆணையும் வெளியிடப்படவில்லை. இது பற்றி தங்கள் வாரியம் தொடர் நடவடிக்கை ஏதும் எடுத்ததா? இரண்டாவது மாநில நிதி ஆணையம் தெரிவித்த பொறுப்புகளில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஏற்கெனவே செய்து வருகிறதா? என்ற விவரத்தை தெரிவிக்கவும்.

7) வேறு ஏதாவது பொருட்கள் மற்றும் பிரச்சினை பற்றி கருத்து.